**<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>**

**<u>அசல் வழக்கு எண்.163/2010</u>**

2023 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 07 ம் நாள் செவ்வாய் கிழமை வாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.அ.சீனிவாசன், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அசோக்குமார் | தந்தை/கணவர் பெயர் | : |
| ஜாதி | : | கிராமம் | : |
| வட்டம் | : | மதம் | : |
| தொழில் | : | வயது | : |

நாள் : 07.02.2023

**P.W. : 1**

**<u>2 முதல் 7 பிரதிவாதிகளின் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

என் தகப்பனார் மற்றும் என் அப்பா ஆகியோர் சேர்ந்து விற்ற பத்திரத்தில் என் தகப்பனாரின் அத்தை நல்லம்மாளும் கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த ஆவணம் வா.சா.ஆ.14 என்றால் சரிதான். அந்த நல்லம்மாளும் மற்றும் அவரது வாரிசுகளும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே நல்லம்மாள் இறந்துபோய்விட்டார் என்றால் சரிதான். இந்த வா.சா.ஆ.14 கிரைய பத்திரத்திலேயே நல்லம்மாளுக்கு சேர வேண்டிய பங்கை கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பத்திரம் வா.சா.ஆ.13 ஆனது எனது தாத்தா ராமசாமி கவுண்டர் கிரையம் வாங்கிய பத்திரம் என்றால் சரிதான். வா.சா.ஆ.14 ஆவணத்திற்கு

1978 கிரையம் செய்யப்பட்ட பத்திரத்திற்கு பிறகு வேறு கூட்டாக பத்திரங்கள் இல்லை என்றால் சரியல்ல. ஒரு பத்திரம் உள்ளது. பூர்வீக சொத்துக்களை எத்தனை பத்திரமாக கிரையம் செய்யப்பட்டது என்றால் 2 பத்திரமாக கிரையம் செய்யப்பட்டதாகும். சின்னப்பன் மனைவி பாப்பாத்தி என்பவருக்கு ஒரு பகுதி சொத்தை கிரையம் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த பத்திரம் வா.சா.ஆ.11 ஆகும். அந்த வா.சா.ஆ.13 மற்றும் வா.சா.ஆ.14 பிறகு பூர்விக சொத்துக்கள் எதுவும் எனது தாத்தா ராமசாமிக்கு இல்லை என்றால் சரிதான். 06.10.1970 அன்று எனது தாத்தா ராமசாமி கவுண்டர் என்பவர் தனது மகன்கள் ஸ்ரீரங்க கவுண்டர் மற்றும் குமாரசாமி கவுண்டர் ஆகியோர் பெயரில் முசிறியில் சொத்து வாங்கினாரா என்றால் சரியல்ல. ஸ்ரீரங்க கவுண்டரும், குமாரசாமி கவுண்டரும் கூட்டு கிரையமாக சொத்துக்களை வாங்கினார். அவர்கள் யாரிடம் இருந்து வாங்கினார்கள் என்றால் முத்துசாமி கண்டர் என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கினார்கள். அது விவசாய நிலமாகும். 1975 ல் செங்கோட கவுண்டர் என்பவருக்கு என் தாத்தா ராமசாமி கவுண்டர் ஒரு கிரையம் செய்துள்ளரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் தாத்தா ராமசாமி கவுண்டர் என்ன சொத்து வாங்கினார் விற்றார் என்ற விவரம் பற்றி முழுமையாக எனக்கு தெரியாது என்றால் தவறு. என்னிடம் சொல்லப்படும் மேற்படி செங்கோட கவுண்டருக்கு கிரையம் செய்யப்பட்ட சொத்து பற்றி எனக்கு தெரியாது. ஸ்ரீரங்க கவுண்டர் 1971ம் வருடம் திருச்சிக்கு குடி வந்து விட்டார் என்றால் அவர் முகவரி எனக்கு தெரியாது. அவர் திருச்சி கிராப்பட்டிக்கு குடிவந்த விவரம் பற்றி எனக்கு தெரியாது. அவர் திருச்சி கிராப்பட்டிக்கு வந்து ரோடு கான்ட்ராக்ட் எடுத்து வேலை பார்த்து வந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனது தாத்தா ராமசாமி

கவுண்டரும் பெரியப்பா ஸ்ரீரங்க கவுண்டரும் மற்றும் எனது அப்பாவும் கூட்டாக ரோடு கான்ட்ராக்ட் எடுத்து செய்து வந்தார்கள். ரோடு கான்ட்ராக்ட் எடுப்பதை பொறுத்து Solvency Certificate ஒப்பந்ததாரர் கொடுக்க வேண்டும் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் தகப்பானருக்கு அன்றைய காலக்கட்டத்தில் எந்த வங்கியில் கணக்கு இருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் அப்பா 1970-1980 காலக்கட்டத்தில் தனியாக வருமான வரி கணக்கு வைத்திருந்தாரா என்றால் இல்லை. 1960-1986 காலக்கட்டத்தில் ஸ்ரீரங்க கவுண்டர் பெயரில் வருமான வரி கணக்கு இருந்தது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதேபோல் எனது தாத்தா ராமசாமி கவுண்டர் பெயரிலும் வருமான வரி கணக்கு இருந்தது அதுபற்றியும் எனக்கு தெரியாது. எனது தாத்தா ராமசாமி கவுண்டர் எங்கெங்கு வங்கி கணக்கு வைத்திருந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். முசிறி கூட்டுறவு நிலவள வங்கியில் வைத்திருந்தார். வேறு வங்கி தெரியாது. தில்லைநகர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிளையில் ராமசாமி கவுண்டர் பெயரில் 1964 ல் கணக்கு இருந்தது என்றாலும் மற்றும் முசிறி இந்தியன் ஓவர்சீஸ் வங்கியிலும், பிச்சாண்டார் கோவில் பஞ்சாப் நேஷனல் வங்கியிலும், பாடாலுர் யூனியன் வங்கியிலும் அவர் கணக்கு வைத்திருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1971 ல் ராமசாமி கவுண்டர் மகன் குமாரசாமி கவுண்டருக்கு மலையப்பன், அல்லிமுத்துக்கண்டர் ஆகியோர்கள் முசிறியில் ஒரு வீடு கிரையம் செய்யப்பட்டுள்ள விவரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.